ஊடக அறிவித்தல் இல. – 58

# தேர்தல் ஆணைக்குழு

## பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05

### வாக்கு அடையாளமிடுதலும் விருப்பு வாக்குகள் அடையாளமிடுதலும் தொடர்பான விளக்கம்

01. 2020 ஆகஸ்ட் மாதம் 05 ஆந் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலின்போது தான் விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் பெயருக்கும் சின்னத்திற்கும் முன்னால் அல்லது சுயேச்சைக் குழுவின் இலக்கத்திற்கும் சின்னத்திற்கும் முன்னால் புள்ளடி ("x") அடையாளமொன்றை இட்டு வாக்குச் சீட்டை அடையாளமிடுதல் வேண்டும்.

02. அதன் பின்னர் அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பெயர்குறிக்கப்பட்ட மூன்று வேட்பாளர்களை விஞ்சாத எண்ணிக்கை கொண்ட வேட்பாளர்களுக்கு, விருப்பு வாக்கு இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டினுள் உரிய இலக்கங்களின் மீது புள்ளடி ("x") அடையாளமொன்றை இடுவதன் மூலம் தனது விருப்பு வாக்கை அளிக்க முடியும்.

03. வாக்கெண்ணும்போது, நிராகரிக்கப்படும் வாக்குச் சீட்டுகள்;

    3.1 எந்தவோர் அரசியற் கட்சிக்கும் அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் வாக்களிக்கப்படாத அல்லது,
    3.2 ஒன்றுக்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கு வாக்கு அடையாளமிடப்பட்டுள்ள அல்லது,
    3.3 ஒன்றுக்கு மேற்பட்ட சுயேச்சைக் குழுக்களுக்கு வாக்கு அடையாளமிடப்பட்டுள்ள அல்லது,
    3.4 ஒன்றுக்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கு அல்லது சுயேச்சைக் குழுக்களுக்கு அல்லது கலப்படமாக கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் வாக்கு அடையாளமிடப்பட்டுள்ள அல்லது,
    3.5 வாக்காளரை இனங்கண்டு கொள்ளக்கூடிய விதத்தில் வாக்குச் சீட்டின் மீது ஏதேனும் எழுதப்பட்டுள்ள அல்லது வரையப்பட்டுள்ள அல்லது,
    3.6 வாக்கு அடையாளமிடப்பட்டிருப்பது, எந்தக் கட்சிக்கு/ சுயேச்சைக் குழுவுக்கு என்பது நிச்சயமற்றதாகவுள்ள

    அவ்வாறான வாக்குச் சீட்டுகள் நிராகரிக்கப்படும்.

04. உரிய முறையில் வாக்கு அடையாளமிடப்படாத வாக்குச் சீட்டுகள், விருப்பு வாக்குகள் எண்ணப்படும்போது கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

05. விருப்பு வாக்குகள் எண்ணப்படும்போது, செல்லுபடியற்ற வாக்குச் சீட்டுகள்,

    5.1 எந்தவொரு வேட்பாளருக்கும் விருப்பு வாக்கு அடையாளமிடப்படாத அல்லது,

    5.2 மூன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கை கொண்ட வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்குகள் அடையாளமிடப்பட்டுள்ள அல்லது,

    5.3 விருப்பு வாக்கு அடையாளமிடப்பட்டிருப்பது எந்த வேட்பாளருக்கென்பது நிச்சயமற்றதாக இருக்கின்ற வாக்குச் சீட்டுகள் விருப்பு வாக்குகள் எண்ணப்படுவதற்கு செல்லுபடியற்றவைகளாகும்.

மஹிந்த தேசப்பிரிய
தவிசாளர்
தேர்தல் ஆணைக்குழு

என்.ஜே.அபேசேக்கர
உறுப்பினர்
தேர்தல் ஆணைக்குழு

எஸ்.இரத்னஜீவன் எச்.ஹூல்
உறுப்பினர்
தேர்தல் ஆணைக்குழு

தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை
இராஜகிரிய

2020.07.20